Koviloor Digital Library

கழக வெளியீடு - ௭௬

உ

திருச்சிற்றம்பலம்

சிதம்பரம்

குருநமச்சிவாயதேவர்

அருளிய

நமச்சிவாயமாலை

இத்துடன்

நமச்சிவாயச்சிறப்புப்பாக்களும்

அடங்கியுள்ளன



அரும்பொருள்விளக்கத்துடன்

ACC NO.
1519-8



திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி & சென்னை
அட்சய௵ ஆவணி௴

Koviloor Digital Library

Published by

The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Ltd.,

Tinnevelly and Madras

September 1926

Printed by C. Munisawmy Mudaliar & Sons, Madras.

Koviloor Digital Library

முகவுரை

இஃது இயற்றியவர் குகைநமச்சிவாயர் மாணவர் குரு நமச்சிவாயதேவர். இவர் திருவருட்பேற்றால் பல்வேறு அருஞ்செயல்களைப் புரிந்தனர் என்பது இவரது வரலாற்றான் உணரக்கிடக்கின்றது. இது,

"பன்னீ ருயிருங் கசதந பமவய
ஞஙவீ ரைந்துயிர் மெய்யு மொழிமுதல்"

என்னும் நன்னூற் சூத்திரத்திற் கூறியாங்குப் பெரும்பாலும் மொழிக்கு முதலில் வரும் உயிர், மெய் எழுத்துக்களை முறையே ஒவ்வொரு கண்ணிகளின் முதலில் தொடங்கிச் செய்யப்பட்டது. ஆயின் அவ்வெழுத்துக்களிற் சில எழுத்துக்களுக்குக் கண்ணிகள் செய்யப் படவில்லை.

இது பஞ்சாக்கர வகைகளாகிய தூல பஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரம், அதிசூக்கும பஞ்சாக்கரம் அல்லது காரண பஞ்சாக்கரம் என்பவற்றில் தூல பஞ்சாக்கரமாகிய

"நமச்சிவாய"

என்பதைச் சிறப்பாகக் கடையில் வைத்து அதை அம்மந்திரத்துக் குரியவனான சிவபெருமானுக்குப் போக்கி விளித்துரை வணக்க முறையாகப் பாடப்பட்டது.

ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலியன முதற்குறிப்பாற் பெயர் பெற்றனபோல, இது 'நமச்சிவாய' என்னும்

Koviloor Digital Library

கடைக் குறிப்பாற் பெயர்பெற்ற தென்க. "எந்நாளோ" எனவும், "பராபரமே" எனவும், "அச்சோவே" எனவும் வருங் கடைக் குறிப்பான் முறையே "எந்நாட்கண்ணி" எனவும், "பராபரக்கண்ணி" எனவும், "அச்சோப்பத்து" எனவும் பெயர் பெற்றமையே இதற்குச் சான்றாம்.

அன்றிச் "சோணசைலனே கைலை நாயகனே" என்னும் மகுடத்தால் "சோணசைலமாலை" எனப்பேர் வந்தமையும் நோக்கற் பாலதே. இது கலைஞான மாகலின் நூல பஞ்சாக்கரத்தாற் கூறினர். மணிவாசகப் பெருமானார் அருளியது மன்றே.

இந்நூல் செந்தமிழ் மொழிகளால் கற்றார்க்கும் மற்றோர்க்கும், பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும் நன்கு விளங்குமாறு எளிய நடையில் இன்ப நயமுள்ளதாகச் செய்யப்பட்டிருக்கின்றது.

இது பஞ்சாக்கரம் உன்னல் செய்வோர் பாடமாக்கி ஓதின் அன்னார் கருதும் பொருள்களை எளிதி லளிக்கவல்லது.

சைவ சமயிகளுக்கு அணிகளாவன திருநீறு,கண்டிகை. பஞ்சாக்கர மாகலின் இஃது அவர்கள் அணியும் மூன்னிரண்டோடு பஞ்சாக்கர நினைப்பிற் கின்றியமையாதது.

இது சிந்தித்தற்கு ஏற்றவாறு நூறு கண்ணிகளாகச் செய்யப்பட்டது.

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாயமாலை

காப்பு

மந்திர நமச்சி வாய மாலைநான் செப்பு தற்குக்
கந்தவே டனக்கு மூத்த கணபதி காப்புத் தானே.

அறைமறை யயனு மாலு மமரரு முனிவர் தாமும்
முறைமுறை வணங்கி யேத்து முதல்வனே நமச்சி வாய. க

ஆதியாய் வேத நான்கா யடிமுடி தெரியா வண்ணஞ்
சோதியாய் நிறைவாய் நின்ற துணைவனே நமச்சி வாய. உ

இணையடி தேடிக் காணு வேழுல களந்த மாயன்
கணையதா வெயின்மூன் றெய்த கடவுளே நமச்சி வாய. ந

ஈட்டிய பொருள்போ லுன்ற னிணையடி பணிவார் துன்பம்
வாட்டிய செம்பொன் மேனி வள்ளலே நமச்சி வாய. ச

உமையொரு பாகம் வைத்த வும்பர்க டம்பி ரானே
அமைதரு மணியே முத்தே யண்ணலே நமச்சி வாய. ரு

ஊனுமா யுயிரு மாகி யுள்ளுமாய்ப் புறம்பு மாகித்
தாணுவாய்ச் சகத்துக் கெல்லாந் தந்தையா நமச்சி வாய. சு

Koviloor Digital Library

எழுபிறப் பதனான் மாழ்கு மென்னுயிர்க் கிரங்கி வந்து
பழுதற வாண்டு கொள்ளும் பரமனே நமச்சி வாய. எ

ஏடவிழ் கோதை மாத ரிளமுலை மயக்கப் பட்டு
கேடுத லொழிக்க வல்ல நிமலனே நமச்சி வாய. அ

ஐயமேற் றுண்டாய் பாத மன்பிலேன் றலைமேல் வைத்த
செய்யனே வானோர் போற்றுந் தேவனே நமச்சி வாய. கூ

ஒன்பது வாயிற் கூட்டி லொடுங்குயி ருய்யும் வண்ணம்
பொன்பொதி மலர்த்தாள் காட்டும் புனிதனே நமச்சி வாய. ௰

ஓமெனு மெழுத்தி னுள்ளே யொளியதாய் விளங்கு கின்ற
வாமனே கருணை நல்கும் வள்ளலே நமச்சி வாய. கக

ஔவியம் பேசா வண்ண மடிமையைத் தடுத்தாட் கொள்ளுந்
திவ்விய மணியே முத்தே தேவனே நமச்சி வாய. கஉ

அக்கினைப் பூண்டு கொண்டே யரியவெண் ணீறு பூசுஞ்
சொக்கனே செக்கர் மேனித் தூயனே நமச்சி வாய. கங

கம்பமார் களிறு ரித்த கச்சியே கம்பா செம்பொன்
அம்பலத் தாடு கின்ற வண்ணலே நமச்சி வாய. கச

ஙகரம்போல் வளைந்து மூன்று நாயினே னுணவு தேடும்
பகரொணா வின்ன தீர்க்கும் பரமனே நமச்சி வாய. கரு

சத்தியுஞ் சிவமு மாகித் தாணுவாய்ச் சகத்துக் கெல்லாம்
முத்தியே யளிப்பா யாதி முதல்வனே நமச்சி வாய. ககூ

ஞமனுட னிந்தி ரற்கு நாரணற் கார ணற்குஞ்
சமனுற முதலாய் நின்ற தாணுவே நமச்சி வாய. கஎ

Koviloor Digital Library

இடவிய கபால மேந்தி யேழிரண் டுலக மெல்லாந்
தடவியுங் காண வொண்ணாச் சங்கரா நமச்சி வாய. கஅ

இணங்கிய கமலப் பொற்றா ளிருவரு மேத்தி நின்று
வணங்கவம் பலத்து ளாடும் வானவா நமச்சி வாய. கசு

தண்டமிழ் முனிவன் றன்னைச் சமமுறத் தென்பா லேவும்
அண்டரோ டயன்மால் காணா வாதியே நமச்சி வாய. உ0

நஞ்சணி கண்டத் தானே நதிமதிச் சடையி னானே
கொஞ்சுபச் சிளம்பெண் பாகங் கொண்டவா நமச்சி வாய. உக

பண்டுல களந்த மாலும் பங்கயத் தயனுந் தேடிக்
கொண்டுசென் றறியவொண்ணாக் குரவனே நமச்சி வாய. உஉ

மங்கையோர் பாகம் வைத்து வளர்பிறை முடிமேல் வைத்துச்
செங்கையின் மழுமான் வைத்த தேவனே நமச்சி வாய. உங

இயக்கரு முனிவர் தாமு மிருகரங் குவித்து நின்று
வியக்கவம் பலத்தி லாடும் விமலனே நமச்சி வாய. உச

அரகர சிவனே யென்று மம்பலத் தாடி யென்றும்
பரவுவார் துயரந் தீர்க்கும் பரமனே நமச்சி வாய. உரு

இலவிதழ் மடவார் தங்க ளேவலுக் குரிய னாகி
அலமரு மென்னை யாண்ட வமலனே நமச்சி வாய. உசு

வளமுறு மங்கை தன்னை மற்றிடப் பாகம் வைத்தே
ஒளிமதிக் கீற்றைச் சூடு மொருவனே நமச்சி வாய. உஎ

அழகிய முருக னுக்கோ ராறுமா முகமுங் கூர்மை
பழகிய வேலு மீந்த பரமனே நமச்சி வாய. உஅ

Koviloor Digital Library

இளமையு மூப்பு மில்லா விறைவனே யெப்பிரானே
வளமையாங் கருணை மோன வள்ளலே நமச்சி வாய. ௨௯

அறவனே பாதந் தேடி யன்றிரு வோருங் காணா
இறைவனே யென்னைக் காக்கு மீசனே நமச்சி வாய. ௩௰

அனந்தலி னின்றுள் போற்றி யருச்சிக்கு மடியார் தங்கள்
இனந்தனி லென்னை வைப்பா யீசனே நமச்சி வாய. ௩௧

கரியுரி யதனைப் போர்த்துக் கபாலமுங் கையி லேந்தித்
திரிபுர தகனஞ் செய்த தேவனே நமச்சி வாய. ௩௨

காலனை யுதைத்த காலா காமனை யெரித்த கண்ணா
பாலனைக் கறிய தாக்கும் பரமனே நமச்சி வாய. ௩௩

கிளிமொழி யமுதச் செவ்வாய்க் கெவுரியைப் பாகம் வைத்த
ஒளிமதிச் சடையி னானே யொருவனே நமச்சி வாய. ௩௪

திண்டுவெற் பெடுத்த வீரக் கேடிலா வரக்கன் றன்னை
மாண்டுக விரலா லூன்றும் வள்ளலே நமச்சி வாய. ௩௫

குழைகுமி ழடருங் கண்ணாட் கோதையைப் பிரிந்த போது
பிழைசெயு மதனைக் காய்ந்த பிஞ்ஞகா நமச்சி வாய. ௩௬

கூவிள மறுகு தும்பை கொன்றைவெள் ளெருக்கு மத்தை
மேவிய சடையி னானே வித்தகா நமச்சி வாய. ௩௭

கெங்கையைச் சடைமேல் வைத்துக் கெவுரியைப் பாகம் வைத்தல்
அங்கணா நீதியோசொ லையனே நமச்சி வாய. ௩௮

கேசவன் வணங்கிக் கண்ணாங் கேழ்கிளர் கஞ்சஞ் சூட்ட
ஆகியோ டாழி யீந்த வமலனே நமச்சி வாய. ௩௯

Koviloor Digital Library

கைச்சிலை மேரு வாகக் கரியமால் பகழி யாக
உச்சிதப் புவித்தே ரேறு மொருவனே நமச்சி வாய. ௪0

கொற்றவன் றனக்கு முன்னே குதிரையி லேறிக் காட்டிப்
பொற்றுகிற் கோலாற் கொள்ளும் பூரணா நமச்சி வாய. ௪௧

கோணமா மலையில் வாழுங் கோதிலா வாதி யேநீ
ஆணல்லை பெண்ணு மல்லை யத்தனே நமச்சி வாய. ௪௨.

சந்திரன் விளங்குஞ் சென்னித் தலைவனே தம்பி ரானே
இந்திர னிமையோர் போற்று மிறைவனே நமச்சி வாய. ௪௩

சாந்தணி முலையா டன்னைத் தன்புன லெனப்பேர் மாற்றி
ஏந்துசெஞ் சடையெம் மானே யிறைவனே நமச்சி வாய. ௪௪

சிரமது கையி லேந்திச் சீரிய முனிவர் தங்கள்
விரகினை யழித்த மேரு வில்லியே நமச்சி வாய. ௪௫

சீதள கமல வாவித் திருநாவ லூரன் றன்னைச்
சாதனங் காட்டி யாண்ட தாணுவே நமச்சி வாய. ௪௬

சுத்தவெண் ணீறு பூசிச் சுடலையி னடன மாடும்
அத்தனே யாரூர் வாழு மண்ணலே நமச்சி வாய. ௪௭

சூரியன் றுயரந் தீர்த்தாய் தோன்றிமுப் புரத்தைச் சுட்டாய்
ஆரிய வெள்ளி வெற்பி னத்தனே நமச்சி வாய. ௪௮.

செஞ்சிலை கையி லேந்திச் சிரித்துமுப் புரமெ ரித்தாய்
தஞ்சமென் றனைய டைந்தேன் றாணுவே நமச்சி வாய. ௪௯

சேதன வடியா ரோடு திருப்பெருந் துறையில் வந்து
வாதவூ ரரசை யாண்ட வரதனே நமச்சி வாய. ௫0.

Koviloor Digital Library

சைவனே யைம்பு லங்க டமைமனஞ் சாரா வண்ணங்
கைவர மருள வேண்டுங் கடவுளே நமச்சி வாய. ௫௧

சொரிமலர்க் கொன்றை தும்பை சொல்லிய வறுகு தாளி
விரிமலர்ச் சடையாய் வெள்ளி வெற்பனே நமச்சி வாய. ௫௨

சோலைசூ ழால வாயிற் சோதியே சமணை மாய்க்கப்
பாலரு வாயி னார்க்காப் பரிந்தரு ணமச்சி வாய. ௫௩

தந்தையுந் தாயு மில்லாத் தானுவே யாண்பெண் ணல்லாய்
இந்திர னயன்மால் போற்று மிறைவனே நமச்சி வாய. ௫௪

தாதவிழ் கொன்றை தும்பை சங்கொடு தலையுங் கொண்ட
நாதனே வேத மோது நம்பனே நமச்சி வாய. ௫௫

திரிபுர மெரித்த மூர்த்தி தென்னவன் முன்னே முன்னாள்
நரிதனைப் பரிய தாக்கு நம்பனே நமச்சி வாய. ௫௬

தீதிலா வாத வூரர் செய்கைகண் டுளம கிழ்ந்த
நாதனே பரனே வானோர் நண்பனே நமச்சி வாய. ௫௭

துணைவனே யன்பர் தங்க டுன்பறுத் தருளு மூர்த்தி
பணைமுலை யுமையாள் பங்கா பரமனே நமச்சி வாய. ௫௮

தூதுசுந் தரற்காச் சென்ற சோலைசூ ழாரு ரையா
ஆதியே யரனே வெள்ளி யசலனே நமச்சி வாய. ௫௯

தென்னவ னாகக் கூடற் சேர்ந்துசெங் கோல்செ லுத்தி
அந்நகர் தன்னை யாண்ட வமலனே நமச்சி வாய. ௬௰

தேடியே யிருவர் காணாத் திருவடி மனத்துள் யாரும்
நாடியே வணங்க நின்ற நம்பனே நமச்சி வாய. ௬௧

Koyiloor Digital Library

தையலோர் பாகம் வைத்துச் சடையிலே கங்கை வைத்த
ஐயனே யாரூர் வாழு மண்ணலே நமச்சி வாய. ௬௨

தொல்லுல கெல்லாம் போற்றுஞ் சோதியே சூல பாணி
வில்லென மேரு வாங்கும் வித்தகா நமச்சி வாய. ௬௩

தோத்திரஞ் செய்மா யற்குச் சுடரொளி யாழி யீந்த
ஆத்தனே யடிய ரன்பிற் களியனே நமச்சி வாய. ௬௪

நஞ்சினை யருந்தி மாய னுன்முகன் முதலோர் நாண
அஞ்செழுத் துருவ மான வத்தனே நமச்சி வாய. ௬௫

நாரண னலரோ னிந்த்ர னுடிமுன் வணங்கி நின்றே
ஆரண மோது கின்ற வாதியே நமச்சி வாய. ௬௬

நிற்பவர் நெறியை நோக்கி நெஞ்சைவிட் டகலா தானே
கற்பனை கடந்த சோதிக் கடவுளே நமச்சி வாய. ௬௭

நீறணி மேனி யானே நிமலனே யமரர் கோவே
ஆறணி சடையி னனே யண்ணலே நமச்சி வாய. ௬௮

நுண்ணிடை மாது பாகா நோக்குவார் தம்மை நோக்குங்
கண்ணுதற் பரனே தேவா கடவுளே நமச்சி வாய. ௬௯

நூபுர பதமா தோடு நுவலருஞ் சபையி லாடும்
மாபுரத் தவர்கள் காலா வானவா நமச்சி வாய. ௭௰

நெஞ்சக மலரி லுன்னை நினைவற நினைந்த பேருக்
கஞ்சலென் றருளிச் செய்யு மண்ணலே நமச்சி வாய. ௭௧

நேத்திரந் தன்னல் வேளை நெருப்பெழச் சுட்டு விட்டாய்
சாத்திர முனிவோர் போற்றுந் தாணுவே நமச்சி வாய. ௭௨

Koviloor Digital Library

கைந்நுனை நினைப்பார் பாவ நாசம தாக்கி நிற்பாய்
பைந்தொடி பாகங் கொண்ட பரமனே நமச்சி வாய. எங

நொந்தவ ரினைத்தோர் தம்மை நொடியள வினில்வாழ் விக்குங்
கந்தாங் கறுத்த மூர்த்தி கடவுளே நமச்சி வாய. எச

நோக்கமூன் றுடையா யென்னை நோக்கியே துரியா தீதத்
தூக்கத்தில் வைப்ப தென்றோ சொல்லுவை நமச்சி வாய.எரு

நௌவியை யேந்துங் கையாய் நயமுட னடியார் தங்கள்
வெவ்வினை யெல்லாந் தீர்க்கும் விமலனே நமச்சி வாய. எகூ

பத்தராய்ப் பணிவார் தம்மைப் பதங்கொடுத் தாளு மையா
சுத்தனே வேதஞ் சொன்ன துணைவனே நமச்சி வாய. எஎ

பாடுவார் மூவர் தம்மைப் பதங்கொடுத் தாண்ட மூர்த்தி
தேடுவார் தேடு கின்ற செம்பொனே நமச்சி வாய. எஅ

பிறையணி சடையி னனே பிஞ்ஞகா வடியார்க் கெல்லாங்
குறைவற வாழ்வ ளிக்குங் கொற்றவா நமச்சி வாய. எகூ

பீடுறப் பூசிப் பார்தம் பெருவினை யறுக்கு மூர்த்தி
ஆடல்சே ரெருதி லேறு மண்ணலே நமச்சி வாய. அய

புகலுறுங் கல்லா லன்பு பூண்டெறி சாக்கி யர்க்குத்
தகவுற முத்தி நல்குந் தாணுவே நமச்சி வாய. அக

பூசுவெண் ணீறு பொங்கப் பொருவிலா வம்மை காண
நேசமோ டாலங் காட்டி னிருத்தஞ்செய் நமச்சி வாய. அஉ

பெண்ணமு தனையார் நாணும் பெட்புறு வளையுந் தூசும்
என்னுறு பலியாக் கொண்ட விறைவனே நமச்சி வாய. அங

Koyiloor Digital Library

பேயுடன் காட்டி லாடும் பிஞ்ஞகா பெரியோர் தங்கள்
தூயநன் மனத்து ளானே சுத்தனே நமச்சி வாய. ௮௪

பையர வணையிற் றங்கும் பாரளந் தோற்குப் பாதி
மெய்யளித் தருள்கூர்ந் திட்ட விண்ணவா நமச்சி வாய. ௮௫

பொரியுறு தேம்பூஞ் சோலைப் புகலியிற் பிள்ளை யார்க்குச்
சரியொளி முத்தின் பந்தர் தந்தவா நமச்சி வாய. ௮௬

போதக மாகி வந்த புன்மைசே ரசுரன் றன்னை
நோதக வுரித்துப் போர்த்த நுண்ணியா நமச்சி வாய. ௮௭

பௌவத்திற் சிலையோ டாழும் படியமண் செய்ய வப்பர்க்
கெவ்வம தகற்றிப் பேற தீந்தவா நமச்சி வாய. ௮௮

மறுவறு மாதி சைவ மரபிற்சுந் தரர்க்குத் தூதாய்ச்
செறிநிசி பரவை வாயிற் சென்றவா நமச்சி வாய. ௮௯

மான்மழுக் கையி லேந்தி வன்னியோர் பாகம் வைத்தே
ஆன்முது கேறுஞ் சோதி யையனே நமச்சி வாய. ௯௰

மிடற்றினிற் காள கூட விடத்தினைக் கறுக்க வைத்தாய்
நடத்தினில் விருப்பம் வைத்தாய் நம்பனே நமச்சி வாய. ௯௧

மீனென வந்த மாயன் விழியினை யிடந்து சாத்த
ஆனதோர் மேனி நல்கு மண்ணலே நமச்சி வாய. ௯௨

முன்னமே பிரமன் றன்னை முனிந்ததோர் தலைய றுத்தாய்
என்னைவந் தாண்டு கொள்வா யீசனே நமச்சி வாய. ௯௩

மூர்க்கனுந் தக்கன் வேள்வி முன்புசென் றழித்து வெற்றி
மார்க்கங்கண் டிட்ட சோதி வானவா நமச்சி வாய. ௯௪

Koviloor Digital Library

மெலிவிலாத் தவத்தோர் கோப மேலுற முன்னாள் விட்ட
புலிதனை யுரித்துச் சாத்தும் புண்ணியா நமச்சி வாய. ௬௫

மேயபே ருணர்விற் கெட்டா வெளியதா யணுவு மாகி
ஆயசிற் சொரூப மான வண்ணலே நமச்சி வாய. ௬௬

மையுறு குழலாள் கூடன் மங்கையர்க் கரசி யார்முன்
செய்குறு பணிக்கு வந்த தேவனே நமச்சி வாய. ௬௭

மொழிதரு நால்வர் தங்கள் முதுமறைத் தமிழ்ப்பா மாலை
ஒழிவின்றிச் சூடிக் கொள்ளு மொருவனே நமச்சி வாய. ௬௮

மோகினி வடிவங் கொண்ட முகில்வண்ணன் றன்னைச் சேர்ந்து
சோகமி லைய னாைத் தோற்றியோய் நமச்சி வாய. ௬௯

மௌவலங் குழலார் மோக வலையறத் துயர்சித் தாந்தச்
செவ்வையா முத்தி யென்று சித்திக்கு நமச்சி வாய. ௭௰

நமச்சிவாயமாலை

முற்றும்.



Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாயச் சிறப்புப்பாக்கள்

திருவைந்தெழுத்து

தேவாரம்

வைத்த பொருணமக் காமென்று சொல்லி மனத்தடைத்துச்
சித்த மொருக்கிச் சிவாய நமவென் றிருக்கினல்லான்
மொய்த்த கதிர்மதி போல்வா ரவர்பா திரிப்புலியூர்
அத்த னருள்பெற லாமோ வறிவிலாப் பேதைநெஞ்சே. க

ஏது மொன்று மறிவில ராயினும்
ஓதி யஞ்செழுத் தும்முணர் வார்கட்குப்
பேத மின்றி யவரவ ருள்ளத்தே
மாதுந் தாமு மகிழ்வர்மாற் பேறரே. உ

இருந்து சொல்லுவன் கேண்மின்க ளேழைகாள்
அருந்த வந்தரு மஞ்செழுத் தோதிநற்
பொருந்து நோய்பிணி போகத்த ரப்பதோர்
மருந்து மாகுவர் மன்னுமாற் பேறரே. ங

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமி னுடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்ச வுதைத்தன வஞ்செ ழுத்துமே. ச

Koviloor Digital Library

ஊனி லுயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிட
ரான கெடுப்பன வஞ்செ ழுத்துமே. ரு

தும்ம லிரும றொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை யஞ்செ ழுத்துமே. சு

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத நாம நமச்சி வாயவே. எ

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாம நமச்சி வாயவே. அ

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. கூ

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கல நமச்சி வாயவே. ய

Koviloor Digital Library

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே. கக

திருவாசகம்

போற்றியோ நமச்சி வாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சி வாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சி வாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சி வாய செயசெய போற்றி போற்றி. கஉ

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரு முயிர்வாழ்க்கை யொறுத்தன்றே வெறுத்திடவே. கங

திருமந்திரம்

தெள்ளமு தூறச் சிவாய நமவென்று
உள்ளமு தூற வொருக்கா லுரைத்திடும்
வெள்ளமு தூறல் விரும்பியுண் ணாதவர்
துள்ளிய நீர்போற் சுழல்கின்ற வாறே. கச

குருவழி யாய குணங்களி னின்று
கருவழி யாய கணக்கை யறுக்க
வரும்வழி மான மறுக்கவல் லார்கட்
கருள்வழி காட்டுவ தஞ்செழுத் தாமே. கரு

Koviloor Digital Library

பெரியபுராணம்

இருவினைப் பாசமு மலக்க லார்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்க ளேறிட
அருளுமெய் யஞ்செழுத் தரசை யிக்கடல்
ஒருகன்மே லேற்றிட லுரைக்க வேண்டுமோ. ௧௬

உபதேசகாண்டம்

அஞ்செ ழுத்தெனு மருமறை மந்திர மதனை
நெஞ்ச ழுத்துவர் முழுமுதற் றேவனை நிகர்ப்பார்
பஞ்ச பாதகர் மீதுமற் றவர்நிழற் படினுஞ்
செஞ்செ வேயவர்க் காண்கினும் பவந்தொலை செல்லும். ௧௭

ஆதி யருளுருவம் பெற்றெடுத்த வஞ்செழுத்தை
ஓதி யுணர்ந்தாரை யுள்ளத் துணர்ந்தாலும்
தீது பிறப்பறுப்பா ரன்னவர்க்குத் தீங்கிழைப்பார்
போது நரகினுக்கு மண்ணுத்தல் போகாதே. ௧௮

திருவிளையாடற்புராணம்

குடைந்துதர்ப் பணமுஞ் செய்து தானமுங்
கொடுத்தும் மாடே
அடைந் தெழுத்தைந்து மெண்ணி யுச்சரித்
தன்பா லெம்மைத்
தொடர்ந்துவங் கிறைஞ்சிச் சூழ்ந்து துதித்தெமை
யுவப்பச் செய்தோர்
உடம்பெடுத் ததனா லெந்த வுறுதியுண்
டதனைச் சேர்வார். ௧௯

Koviloor Digital Library

வாயுசங்கிதை

பண்ணவ னுருவாம் பஞ்சப் பிரமங்கள் பழுதொன் றில்லா
அண்ணலஞ் செழுத்தின் மன்னி யடைவினி லமரு மந்த
நண்ணுமஞ் செழுத்துக் கூறு நம்பனே வினைக ளெல்லாங்
கண்ணறக் களைந்து மாற்றிக் கனிந்தருள் புரிவ னன்றே. ௨௰

மறையொரு நான்கும் வல்லோர் மாசிலஞ் செழுத்தை வல்லோர்
நெறியிலாப் பதித ரேனு நிகழ்த்துமஞ் செழுத்தை யோதில்
உறைதரு பாவ நீங்க வுயர்கதி சேர்வ ரென்னக்
கறைமிடற் றிறைவன் றேவி தன்னொடுங் கழறி னானே. ௨௧

பிரமோத்தரகாண்டம்

முக்க ணாயக னமருண் முதல்வனா மதுபோல்
தக்க மந்திர மெவற்றினுந் தலைமையைந் தெழுத்தே
தொக்க நான்மறைப் பிரணவ மாதியாத் தொடங்கி
ஒக்க வோதியே பரகதி யளப்பில ருற்றார். ௨௨

சிவதருமோத்தரம்

அந்தரத் தியங்க வல்ல வசுரரு மணுக மாட்டார்
சிந்திய சித்தக் கொத்தைப் பேய்களுந் தீண்ட மாட்டா
செந்தழ லென்ன வஞ்சித் தீயவா யரவுந் தீண்டா
மந்திர நவிற்று வாரை மறலியு மஞ்சு மன்றே. ௨௩

வினைகளு மஞ்சும் வெய்ய வினைஞரு மஞ்சு வார்கள்
நினைவினி விட்ட மெல்லா மவர்க்கொரு கணத்தி னேரும்
துணையவே சுழன்று போகுந் துட்டசார்த் தூல மற்று
மனிதரு னல்லா ரேயோ வமரரும் வாஞ்சிப் பாரே. ௨௪

Koviloor Digital Library

கடம்பவனபுராணம்

அஞ்செ ழுத்தினு ளோரெழுத் தின்பய னளவைக்
கஞ்ச நாண்மலர்க் கண்ண னுங் கண்ணனுங் காணார்
செஞ்ச வேபிர ணவத்தொடுஞ் சேர்த்தியுச் சரிக்கிற்
பஞ்ச பாதக ராயினும் பரனெனப் படுவார். உரு

பட்டினத்தார்பாடல்

அஞ்சக் கரமெனுங் கோடாலி கொண்டிந்த வைம்புலனும்
வஞ்சப் புலக்கட்டை வேரற வெட்டி வளங்கள்செய்து
விஞ்சத் திருத்திச் சதாசிவ மென்கின்ற வித்தையிட்டுப்
புஞ்சக் களைபறித் தேன்வளர்த் தேன்சிவ போகத்தையே. உசு

தாயுமானவர்பாடல்

அஞ்செழுத்தி னுண்மை யதுவான வப்பொருளை
நெஞ்சழுத்தி யொன்றாகி நிற்குநா ளெந்நாளோ. உஎ

அருணகிரியந்தாதி

இருந்துநினைப் பார்த மிருவினையை நீக்கும்
பொருந்துமிடி யிம்மையிலே போக்கு—மருந்தன்றே
தம்பிரா னெவ்வுயிர்க்குந் தாணு வருணகிரி
எம்பிரா னோரஞ் செழுத்து. உஅ

திருக்கருவைக்கலித்துறையந்தாதி

கருத்துறு மாயை யிருளுக்குத் தீபங் கழிபிறவிப்
பெருத்தெழு நோவுக் கமிர்தசஞ் சிவினி பேதித்துள்ளம்
வருத்திடு துன்பத் திரைவாரி திக்கு வடவைமன்றத்
தருத்தியி னுடுங் கருவைப் பிரான்றிரு வஞ்செழுத்தே. உகூ

Koviloor Digital Library

அரும்பொருள்விளக்கம்

காப்பு. மந்திரம் - மந் - அந்தப் பொருளை நினைக்கிறவனை, த்ரம் - காக்கின்றது.

க. மால் - விண்டு, அமரர் - நீடித்த ஆயுளுள்ளவர், முறை முறை - பலதடவை.

உ. வேத நான்கு - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்.

ந. இணை - இரண்டு, எழுலகு - பூலோகம், புவர்லோகம், சுவர் லோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம். மாயன் - விண்டு, கணை - அம்பு, எயில் - மதில், எய்த - செலுத்தின (விட்ட),

ச. ஈட்டிய - சேர்த்த, வாட்டிய - போக்கின.

ரு. உம்பர்கள் - மேலுலகர் (தேவர்), அண்ணல் - ஆடவரிற் சிறந்தவன்.

சா. தாணு - சிவன்.

எ. எழுபிறப்பு - தேவர், மனிதர், விலங்கு, புள், ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம்; மாழ்கும் - மயங்கும்.

அ. ஏடு - இதழ் (மலர்), நீடுதல் - நாள் மிகல், நிமலன் - மல மில்லாதவன்.

கூ. ஐயம் - பிச்சை. பாதம் - திருவடி.

ய. ஒன்பது வாயில் - ஒன்பது வழிகள், (காது உ. மூக்குத் தொளை உ. கண் குழி உ. வாய் க. மலவழி க. நீர்வழி க). கூடு - உடம்பு, உய்யும் வண்ணம் - பிழைக்கும் விதம், பொதி - நிறைதல், தாள் - கால், புனிதன் - தூயன்.

யக. வாமன் - அழகன், நல்கும் - கொடுக்கின்ற, வள்ளல் - வரையாது கொடுப்போன்.

Koviloor Digital Library

௰௨. ஔவியம் - பொறாமை, திவ்வியம் - திப்பியம், (உயர்வு)

௰௩. அக்கு - உருத்திராக்கம், பூண்டு கொண்டு - அணிந்து கொண்டு.

௰௪. கம்பம் - கட்டுத்தறி, களிறு - யானை.

௰௫. உழன்று - வருந்தி, உணவு - உண்டி, பகரொணு - (பகர ஒணு) சொல்ல முடியாத, இன்னல் - துன்பம்.

௰௬. சகம் - உலகம், முத்தி - வீடு, அளிப்பாய் - கொடுப்பாய்.

௰௭. ஞமன் - இயமன், ஆரணன் - பிரமன், சமன் - ஒப்பு.

௰௮. இடவிய - அகன்ற (மிக்க இடமுள்ள), ஏந்தி - தாங்கி.

௰௯. இருவர் - பிரமன், விண்டு; வானவா - உயர்ந்தவனே.

௨௰. தண் - குளிர்ந்த, தமிழ் முனிவன் - அகத்தியன், ஏவும் - செலுத்தும், அண்டர் - தேவர்கள், அயன் - பிரமன், நதி - கங்கையாறு, மதி - திங்கள், கொஞ்சு - மழலைப் பேச்சு பேசுகின்ற.

௨௨. பண்டு - முற்காலம், பங்கயம் - தாமரை.

௨௩. மங்கை - உமை, வளர்பிறை - வளர்கின்ற திங்கள், மழு - எரி.

௨௪. இருகரம் - இரண்டு கைகள், குவித்து - கூப்பி, வியக்க - பாராட்ட.

௨௫. பரவுவார் - துதிப்பவர், துயரம் - துன்பம்.

௨௬. இலவு - இலவ மலர், இதழ் - வாயிதழ், ஏவலுக்கு - வேலைக்கு, அலமரல் - வருந்துதல்.

௨௭. மதிக்கீற்று - மூன்றாம்பிறை.

௨௮. முருகன் - இளைஞன், ஈந்த-திருவருள் செய்த (கொடுத்த).

௨௯. மூப்பு - கிழத்தன்மை, மோனம் - சும்மா விருத்தல்.

௩௰. அறவன் - அறக்கடவுள்.

௩௧. அனந்தல் - தூக்கம், இனம் - குலம்.

Koviloor Digital Library.

௩௨. கரி - யானை, உரி - தோல், போர்த்து - மூடி, ஏந்தி - தாங்கி, திரிபுரம் - முப்புரம், தகனம் செய்த - எரித்த.

௩௩. காலன் - இயமன், பாலன் - சிறாளன்.

௩௪. மொழி - சொல், கௌரி - உமை, ஒளி - குளிர்ந்த வெளிச்சம், ஒருவன் - ஒப்பில்லாதவன்.

௩௫. கீண்டு - பிளந்து, வெற்பு - மலை, மாண்டு - இறந்து, உக - சிந்த, ஊன்றும் - அழுத்தின.

௩௬. குழை - காது, குமிழ் - குமிழம்பூ, கோதை-உமை, பிழை-குற்றம், மதன் - காமன்.

௩௭. கூவிளம் - வில்வம், அறுகு - அறுகம்புல், மேவிய-பொருந்தின.

௩௮. அங்கணை - அழகிய நெற்றிக்கண்ணனே.

௩௯. கேசவன் - விண்டு, கேழ் - செந்நிறம், கஞ்சம் - தாமரை, ஆசி - வாழ்த்து, ஆழி - சக்கரம்.

௪௰. சிலை-வில், கரியமால் - கறுப்பு நிறமுள்ள திருமால், பகழி-அம்பு, உச்சிதம் - உயர்வு, புவி - பூமி.

௪௧. கொற்றவன் - அரிமர்த்தன பாண்டி வேந்தன், துகில் - துணி, கோல் - கைக்கோல்.

௪௨. கோணம்மலை - திருக்கோணமலை, கோது - குற்றம்.

௪௩. இமையோர் - தேவர்கள், (கண்ணிமையாதவர்).

௪௪. சாந்து - சந்தனம், தண்புனல் - தண்ணீர் (கங்கை), ஏந்து-தாங்குகின்ற.

௪௫. சிரம் - பிரமன்தலையோடு, சீரிய - உயர்ந்த, விரகு - அறிவு, மேருவில்லி - மேருமலையை வில்லாக உடையவன்(சிவன்).

௪௬. சீதளம் - குளிர்ந்த, கமலம் - தாமரை, வாவி - குளம், சாதனம் - ஓலை.

௪௭. சுத்தம் - தூய்மையான, சுடலையில் - சுடுகாட்டில், நடனம் ஆடும் - கூத்தாடின.

Koviloor Digital Library

௪அ. வெள்ளி வெற்பு - கைலாயமலை, ஆரிய - மேலானவரே, தாணுவே - நிலையானவரே.

௪௯. தஞ்சம் - அடைக்கலம்.

௫0. சேதனம் - இயங்குதல், வாதவூர் அரசு - மாணிக்க வாசக சுவாமிகள், வரதன் - கேட்டவற்றை யளிப்பவன்.

௫௧. ஐம்புலங்கள்-சத்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தங்கள்; கைவரம்-கைகூடுவரம், அருளவேண்டும் - கொடுக்கவேண்டும்.

௫௨. சொரி - சிந்துகின்ற, விரி - படர்கின்ற.

௫௩. சோலை - தோப்பு, ஆலவாய் - மதுரை, சமண் - அமணர்கள், மாய்க்க - கொல்ல, பாலறுவாயினர் - திருஞானசம்பந்தர், பரிந்து - விரும்பி.

௫௪. தாது - தேன், அவிழ் - சிந்துகின்ற.

௫௫. தென்னவன் - அரிமர்த்தன பாண்டியன், பரி - குதிரை.

௫௬. தீது - குற்றம், உளம் - மனம்.

௫௭. துன்பு - வருத்தம், பணை - பருத்த.

௫௮. அசலம் - மலை.

௫௯. நாடி - ஆராய்ந்து.

௬0. தையல் - உமை.

௬௧. தொன்மை - பழமை, பாணி - கையுடையவன், வாங்கும் - வளைத்த,

௬௨. ஆத்தன் - பெரியோன், அளியன் - அன்பன்.

௬௩. நஞ்சு - விடம், அருந்தி - உண்டு, நாண - வெட்கமடைய.

௬௪. ஆரணம் - மறை.

௬௫. கற்பனை - கட்டளை (அளவு).

௬௬. நுண் இடை - மென்மையான இடை. நுதல் - நெற்றி.

௬௭. நுவல் - சொல்லுதல், மாபுரம் - திரிபுரம்.

௬௮. நெஞ்சகம் மலர் - மனோதாமரை, அஞ்சல் - பயப்படாதை.

Koviloor Digital Library

எஉ. நேத்திரம் - கண், வேள் - மன்மதன்.

எங. நைந்து - இளகி, பைந்தொடி - பசுமையாகிய வளைய லணிந்த உமை. (அன்மொழித்தொகை)

எச. நொந்தவர் - வருந்தினவர், நொடி - காலவிரைவு, கந்தரம்- கழுத்து.

எரு. நோக்கம் - கண், துரியாதீதம் - இறந்த இடம்.

எசு. நௌவி - மான், நயம் - அன்பு.

எஎ. பணிவார் - வணங்குவோர், பதம் - திருவடி.

அய. பீடு - பெருமை, பெருவினை - தீவினை.

அக. புகல் -சொல்லுதல், எறி - அடித்த, தகவு - சால்பு.

அஉ. பொங்க - விளங்க, பொருவு இலா - ஒப்பில்லாத, அம்மை- காரைக்காலம்மையார், நேசம் - அன்பு, நிருத்தம் - கூத்து.

அங. அனையார் - ஒத்தவர்கள், நாணும் - வெட்கப் படுகின்ற, பெட்பு - ஆசை, வளை - வளையல், துசு - துணி, பலி - ஐயம்.

அச. பை - பை, அரா - பாம்பு, அணை - பீடம், பார் அளந் தோன் - திருமால், மெய் - உடம்பு, அளித்து - கொடுத்து, அருள் கூர்ந்திட்ட - மிக்க அருள் செய்த.

அரு. பொசியுறு - சிந்துகின்ற, தேம் - தேன், புகலியிற் பிள்ளை யார் - திருஞானசம்பந்தர், சசி - திங்கள், தந்தவா-கொடுத் தவனே.

அசு. போதகம் - யானை, புன்மை - அற்பத் தொழில், நோதக - வருந்தும்படி.

அஎ. பௌவம் - கடல், சிலை - கல், ஆழும்படி - அழுந்தும் வண் ணம், எவ்வம் - துன்பம், அகற்றி - நீக்கி.

அஅ. மறு - குற்றம், செறி நிசி - மிக்க இருள், பரவை - பரவை நாய்ச்சியார்.

Koviloor Digital Library

௯௰. வன்னி - கொடிபோலும் உமை, ஓர் பாகம் - ஒருபக்கம், ஆன் - எருது.

௯௧. மிடறு - கழுத்து, காளகூடவிடம்-ஆலாலம், நடம்-கூத்து.

௯௨. மீன் - மச்சாவதாரம், விழி - கண், இடந்து - பேர்த்து, நல்கும் - கொடுத்த.

௯௩. மூர்க்கன் - கொடியன், வேள்வி - யாகம்.

௯௪. மெலிவு - அயர்ச்சி, சாத்தும் - தரித்துக்கொண்ட.

௯௫. மேய - பொருந்தின. பேர் உணர்வு - பேரறிவு, சிற் சொரூபம் - ஞானவடிவம்.

௯௬. மை - கறுப்பு, கூடல் - மதுரை.

௯௭. ஒழிவு இன்றி - எக்காலமும், சூடிக்கொள்ளும் - தரித்துக் கொள்கின்ற.

௯௮. முகில் வண்ணன் - மேகநிறத்தன் (திருமால்), சோகம் - மயக்கம்.

௱. மௌவல் - முல்லை, குழலார் - கூந்தலையுடைய பெண்கள், செவ்வையாம் - உயர்ந்த, சித்திக்கும் - கைகூடும்.



சிவகாமிவிலாச அச்சுக்கூடம், சென்னை.